**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 166 /2020**
**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | காசி | **வயது** | : | 67 /2026 |
| **தந்தை பெயர்** | : | ராமு | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | செம்மணாப்பொட்டல் | **தொழில்** | : | விவசாயம் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused absent. Petition filed and allowed. Both side counsel present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 04.03.2026**

**SWORN STATEMENT:**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனது மனைவியின் பெயர் செல்லம்மாள். எனக்கு மாணிக்கம் என்ற மகனும், சோபனா என்ற மாற்றுத்திறனாளி மகளும் உள்ளனர். கடந்த 05.02.2020 ஆம் மாலை சுமார் 07.30 மணியளவில் பிராந்தனி நடராஜன் வீட்டு அருகில் மணல் ஏற்றி வந்த டிராக்டர் என் மகன் மீது நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டதாக கோவிந்தசாமி மகன் கருப்பையா என்பவரும், வீராச்சாமி மகன் கருப்பையாவும் எனக்கு எனது மகன் மாணிக்கம் விபத்தில் சிக்கி அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தகவல் கூறனார்கள். நான் அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்த போது எனது மகன் மாணிக்கம் இறந்து விட்டதாக மருத்துவமனையில் தகவல் சொன்னார்கள். அதன்பின்னர் நாகுடி போலிஸ்சார் என்னிடம் வந்து உன் மகனுக்கு வாகனம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் ஒரு வெற்றுத்தாளில் கையொப்பம் செய்து கொடு என்று கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் இருந்த ரூபாய் நான்காயிரத்தை எனது மகனுக்கு வாகனம் ஓட்டுநர் உரிமம் இல்லாததற்கான அபதாரமாக பெற்றுக்கொண்டனர். எனது மகனை இறந்த உடலை அன்றே எங்களது ஊருக்கு கொண்டு சென்று எரியூட்டிவிட்டோம். ஒரு வாரத்திற்கு பின்பு நாகுடி காவல் நிலையத்திற்கு முதல் தகவல் அறிக்கை வாங்க நாகுடி காவல் நிலையம் சென்றேன். அங்கு எனக்கு முதல் தகவல் அறிக்கை வழங்கப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கையை வாங்கி பார்த்த போது என் மகனால் விபத்து ஏற்பட்டது போன்று தவறுதலாகவும், உண்மைக்கு புறம்பானதாகவும் எழுதப்பட்டிருந்தது. இதனால் நான் காவல் உயர் அதிகாரிகளுக்கு உண்மைக்கு புறம்பான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை சொல்லியும், என் மகன் விபத்திற்கு காரணமாக டிராக்டரின் TN 55 AT 9189 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநரான பாலமுருகன் மீது நடவடிக்கை எடுக்க மனு அனுப்பினேன். ஆனால்

காவல் உயர் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. இந்த வழக்கின் எதிரி பாலமுருகன் அஜராக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தினை ஓட்டி எனது மகன் மீது மோதியதால் இறந்துள்ளார். அதனால் இந்த வழக்கை சமூகம் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க தாக்கல் செய்துள்ளேன். எனது மனுவின் படி பரிகாரம் தர வேண்டுகிறேன்.

**புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/−எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**